6 ஜூன் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

**கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்த திருவிழா**

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**கலாச்சார எல்லைகளை இணைப்போம்**



# அறிந்திட முடியாத அன்பின் மறைபொருள்

ஒரு கத்தோலிக்க மருத்துவமனையில் பிரசவத்திற்குப் பின் ஒரு தாய் தேறி வந்தார். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை என்பதால், நற்கருனை பெற விரும்புகிறீர்களா என அங்கு வந்த ஆலயப் பொறுப்பாளர்களில் ஒருவர் வினவினார். நற்கருணையைப் பெற்றுக் கொண்ட போது அவளும் அவளது கணவரும் பெருமிதமும் பரவசமும் கொண்டனர். தொற்று நோய் காரணமாக நீண்ட காலம் திருப்பலிக்குச் செல்ல முடியாத காரணத்தால், நற்கருணையை உண்ட போது அளவிட முடியாத அன்பை உணர்ந்தனர்.

இந்த ஞாயிற்றுக்கிழமை, கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்த திருவிழாவைக் கொண்டாடுகிறோம். குருவானவர் அருள்பொழிவு செய்வதற்கு உயர்த்தும் அப்பத்திலும் ரசத்திலும் கிறிஸ்து உண்மையாகவே பிரசன்னமாக இருக்கிறார் என்பதை கத்தோலிக்கர்களாகிய நாம் நம்புகிறோம். ஆண்டவரின் பிரசன்னம் ஒரு மறைபொருள். முழுமனத்தோடும் ஆன்மாவோடும் தமது தந்தையிடம் தம்மை அவர் ஒப்படைக்கிறார். பல புனிதர்களும் வேத சாட்சிகளும் இந்த உண்மைக்கு சாட்சியாக வாழ்ந்து உயிர் நீத்துள்ளனர்.

எபிரேயருக்கு எழுதிய மடல், நமது நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. பழங்கால இஸ்ராயேல் மக்களின் செம்மறிக்குப் பதில் இயேசு பலி ஆடாக ஒப்புக் கொடுக்கப்படுவதையும், புதிய உடன்படிக்கையை அவர் நிறைவு செய்வதையும் புனித பவுல் விவரிக்கிறார். விடுதலை பயண நூலின் 24ம் அதிகாரத்தில், இஸ்ராயேல் மக்களின் சார்பாக மிருகத்தின் இரத்தத்தைக் குரு பலியிடுகிறார். மோசே சட்டப்படி பாவபரிகாரத்திற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. ஆனால், தலைமைக் குருவான கிறிஸ்து மிருகத்தைப் பலியிடவில்லை. நித்திய மீட்பைப் பெறுவதற்கு ஒரே பலியாக தமது உடலையும் இரத்தத்தையும் அவர் பலி கொடுத்தார்.

**கிறிஸ்துவின் பிரசன்னம் மகத்துவமானது என்பது நமது அனுபவம், மற்ற நம்பிக்கை கொண்டோருடன் நாம் விவாதம் செய்ய வேண்டியதில்லை.** ஒவ்வொரு முறையும் நற்கருணையைப் பெறும் போது இயேசுவின் வார்த்தைகள் நமது உள்ளத்தில் பதியட்டும். 'பெற்றுக் கொள்ளுங்கள், இது எனது உடல்'. நற்கருணையைப் பெறும் ஒவ்வொரு முறையும் 'ஆட்டுக்குட்டியின் திருமண விருந்துக்கான' (திவெ.19:9) அழைப்பை ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொள்கிறோம். இந்த விருந்துக்கான அழைப்பை ஏற்றுக்கொள்வது இயேசு நம்மோடு வருகிறார், நம்மில் தங்குகிறார். இதனால் அவரது இறைத்தன்மையில் பங்கு பெறுகிறோம் (2பேதுரு 1:4). 'இறைத்தன்மை வாழ்வில் சங்கமம் ஆகிறோம் என்பதன் மாண்பு வாய்ந்த அடையாளமே, நற்கருணை' (கதிம 1325) என திரு அவை போதிக்கிறது.

'எளிமையான அப்பத்தில்,மென்மையாக நம்மிடம் இயேசு வருகிறார். நமது உள்ளத்திலிருந்து சுயநலம் எனும் அசுத்தத்தை சலவைச் செய்வதற்குச் சாந்தமான அப்ப வடிவில் அவர் வருகிறார். நமது உள்ளம் உறைந்து போகாமல் இருப்பதற்கான தடைகளை அகற்றுவதற்கு, நமது இதயத்தைத் திறந்து வைத்தால் போதும்' என நமது திருத்தந்தை கூறுகிறார்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்."

(யோவா. 6: 51)

**இன்றைய வாசகங்கள்:**

விப. 24, 3-8;
திப. 115, 12-13, 15-18;
எபி. 9, 11-15;
மாற்கு 14, 12-16, 22-26.

INTERNAL CIRCULATION ONLY
BUL 23/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org